17.03.2025

OS No: 564/2019

வா.சா.1 திரு. முத்துக்கருப்பன், த/பெ. பெரியகருப்பன்

**<u>1 முதல் 6ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்கு எதற்காக போட்டுள்ளேன் என்றால் தாவா வழக்கில் சொல்லப்பட்ட கோவிலானது எங்களுடைய குல தெய்வ கோவிலென பரிகாரம் கேட்டு போட்டுள்ளேன். நான் எந்த வகையறா என்றால் குப்பன் வகையறா. 2ம் வாதி கருப்பையா எந்த வகையறாவை சேர்ந்தவர் என்றால் சின்னக்கருப்பையா வகையறாவைச் சேர்ந்தவர். 3ம் வாதி எந்த வகையறா என்றால் அவர் எனது தம்பி குப்பன் வகையறா ஆவார். 4ம் வாதி பாண்டி யாருடைய வகையறா என்றால் ஆறுமுகம் வகையறா. தாவா கோவிலின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா கோவில் சர்வே எண் என்ன என்றால் 409/1 ஆகும். தாவா கோவிலின் சர்வே எண், 419/1 என பிரதிவாதிகள் சொல்கிறார்கள் என்றால் 419/1 என்பது தான் சரியாகும் 409/1 என மறந்து சொல்லிவிட்டேன். சர்வே எண். 419லிருந்து தான் சர்வே எண். 419/1 என உள்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 419/2 இடமானது 1 முதல் 6 பிரதிவாதிகள் வகையறாவிற்குரியது என்றால் இருக்கலாம். தாவா கோவிலானது ஆரம்பத்தில் கூரைக்கூடமாக இருந்து பிறகு ஓட்டுக்கூடமாக கட்டப்பட்டது என்றால் சரிதான் யார் ஓட்டுக்கூடமாக கட்டியது என்றால் 4 வகையறாவைச் சேர்ந்த ஆட்கள் தான் கட்டினோம். எனக்கு பூர்வீக ஊர் எது என்றால் ஊத்திக்குளம் ஆகும். என்னுடன் பிறந்தவர் யார் என்றால் 3ம் வாதி குப்பான் (எ) பூச்சி என் உடன் பிறந்தவர் ஆவார். ஊத்திக்குளத்தில் எனக்கு சொத்துள்ளதா என்றால் புஞ்சை நிலம் உள்ளது அதன் சர்வே எண் ஞாபகமில்லை. மேற்படி புஞ்சை நிலம் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது. தாவா கிராமத்தில் எனது பாட்டனார் மற்றும் எனது முன்னோர் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். குலதெய்வம் என்பது ஒரு பூர்வீகம் எங்கு தோன்றுகிறதோ அங்கு தான் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து அரசு ஆவணத்தில் என்ன பெயரில் பதிவாகியுள்ளது என்றால் முத்தையா கோவில் என்ற பெயரில் பதிவாகியுள்ளது. அரசு ஆவணத்தில் முத்தரையர் இன கோவில் என இல்லை என்றால் சரிதான். கோவில் பூஜைக்கு காத்தான் வகையறாவும்,

சின்னக்கருப்பன் வகையாறவும் தான் வருவார்கள் என்றால் சரியல்ல 4 வகையறாவைச் சேர்ந்த ஆட்கள் வருடத்திற்கு ஒரு முறை என மாறி மாறி வருவார்கள். கோவில் உள்ள இடமான சர்வே எண், 419/1 இடமானது 1 முதல் 6 பிரதிவாதிகளுக்குரிய இடம் என்றால் சரியல்ல. 1 முதல் 6 பிரதிவாதிகள் குலையர் வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். குலையவர் வகையறாவைச் சேர்ந்தவர்கள் தான் மேற்சொன்ன காத்தான் வகையறாவையும், சின்னக்கருப்பன் வகையறாவையும் தாவா கோவிலுக்கு பூஜை செய்ய நியமனம் செய்தவர்கள் என்றால் இல்லை. காத்தான் வகையறாவிற்கும், சின்னக்கருப்பன் வகையறாவிற்கும் பூஜை செய்வதற்கு வாரிசுகள் இல்லை என்றால் ஆண் வாரிசுகள் இல்லை. காத்தான் வகையறாவும், சின்னக்கருப்பன் வகையறாவும் அவர்களது காலத்தில் தாவாகோவிலுக்கு பூஜை செய்தார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 419 உட்பிரிவு செய்வதற்கு முன்னால் குலையர் வகையறா இடமாக இருந்தது என்றால் இல்லை. குலையர் வகையறா கோவிலுக்கு என இடத்தைக் கொடுத்துவிட்டு மீதி இடத்தை பங்காளிகள் வசம் பட்டா மாற்றிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. எங்களது ஊரில் சைவ முனீஸ்வரர் என்ற கோவில் ஆலமரத்திற்கு அருகில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி சைவ முனீஸ்வரர் கோவிலுக்கு எங்கள் இனத்தை சேர்ந்த கட்டாண்டி வகையறா பூஜை வைத்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சைவ முனீஸ்வரர் கோவில் 1 முதல் 6 பிரதிவாதிகள் இடத்தில் தான் உள்ளது என்றால் இல்லை. மேற்படி ஆலமரம் 1 முதல் 6 பிரதிவாதிகள் இடத்திற்குள் அமைந்துள்ளது என்றும் அங்கு தான் சைவ முனீஸ்வரர்கோவில் அமைந்துள்ளது என்றும் மேற்படி சங்கதி குறித்து இல்லை என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கட்டாண்டி வகையறாவை பூஜைக்கு நியமனம் செய்தது 1 முதல் 6 பிரதிவாதிகள் வகையறா என்றால் சரியல்ல. முனீஸ்வரர் கோவிலுக்கு துணியில் வெல்லத்தைக் கட்டி மஞ்சுவிரட்டு திருவிழா வருடாவருடம் 1 முதல் 6 பிரதிவாதிகள் வகையறா நடத்துவார்கள் என்றால் சரியல்ல. விவசாய நிலத்தில் கதிர் அறுவடை செய்வதற்கு முன்னால் சைவ முனீஸ்வரர் கோவிலில் வழிபாடு செய்வார்கள் என்றால் சரிதான். கிராமத்திற்கு வரக்கூடிய ரோட்டிற்கு அருகே மாரியம்மன் கோவில் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருதன் வகையறாவும்,பெரியாம்பிள்ளை வகையறாவும் அவர்களுடைய இடத்தில் கோவில் கட்டி வழிபடுகிறார்கள் என்றால் அரசு இடத்தில் கற்களை

குவித்துவைத்து வழிபடுகிறார்கள். ஊரில் பொதுக்கோவில் ஒன்று இல்லை என்றும், அவரவர்கள் கற்களை வைத்து வழிபடுவார்கள் என்றால் சரிதான். மாரியம்மன் கோவிலில் பங்குனி மாதம் 22ம் தேதி பொங்கல் வைத்து சாமி கும்பிடுவது உண்டு என்றால் சரிதான். மாரியம்மன் கோவிலில் திருவிழாக்கள் நடத்துவது கண்டிப்பட்டி (எ) செங்குலிப்பட்டி கிராமத்தார்கள் என்றால் சரியல்ல, ஊத்துக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தான் திருவிழா நடத்துவார்கள், மற்ற கிராமத்தார்கள் நன்கொடை கொடுத்தால் வாங்கிக் கொள்வோம். மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று WP(MD).No.375/2018 என்ற போட்டுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி வழக்கின் உத்தரவை தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதாக எனது நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் காட்டை சுத்தம் செய்யவில்லை என்பதால் அவ்வாறு சொல்லியுள்ளேன். நீதிமன்றம் எங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1ல் முத்தையா என்ற வாசகம் சுழிக்கப்பட்டு கோவில் என்று தான் உள்ளது என்றால் சுழிக்கப்பட்டிருக்கலாம். வா.சா.ஆ.2ல் முத்தையா கோவிலுக்கு நிதி வசூல் செய்த விபரம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணத்தில் நிதி வசூல் விபரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணத்தில் கோவிலுக்கு கமிட்டியாளர் யார் என்று இல்லாமல் நிதி வசூல் மட்டும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் யார், யார் நிதி கொடுத்தார்கள் என்ற விபரம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணத்தில் யார் நிதி வசூல் செய்தார்கள் என்றோ, மேற்படி நிதியை யார் செலவு செய்தார்கள் என்றோ விபரம் இல்லை என்றால் அதற்கென யாரையும் நியமிக்கவில்லை என்பதால் யார் பணம் கொடுத்தாலும் எழுதிக் கொள்வோம். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் நிதியை நாங்கள் வசூல் செய்து 1 முதல் 6 பிரதிவாதிகள் வகையறாவிடம் கொடுத்துவிடுவோம் என்றும் அவர்கள் தான் செலவு செய்வார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 எவ்வாறு எழுதப்பட்டது என்றால் வெள்ளைபேப்பரில் எழுதி அது வா.சா.ஆ.9ல் டைப் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.9ற்கு நோட் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 வெல்லக்கட்டி மஞ்சுவிரட்டிற்கு நிதி வசூல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் நிதி வசூல் செய்யவில்லை நிதி கொடுப்பவர்களிடம் பெற்று மேற்படி

ஆவணத்தில் எழுதிக்கொள்ளப்பட்டது, மழை பெய்யாதபோது வெல்லக்கட்டி மஞ்சுவிரட்டு நடத்துவோம். வா.சா.ஆ.10ல் ஊர் வசூல் ரூபாய் 500 என எழுதப்பட்டுள்ளது என்றால் எங்களுக்குள் நிதி கொடுக்கப்பட்டது எழுதிக்கொள்ளப்பட்டது. முத்தையா கோவிலுக்கு உள்ளே சேவுகப்பெருமாள் அய்யனார் உள்ளது என்றால் சரியல்ல. தாவா கோவில் ஊர்க்காவல் அய்யனார் கோவில் என்றும், அது ஊர்க்காவல் தெய்வம் என்றும் எங்கள் வகையறாவிற்கு மட்டும் பாத்தியப்பட்ட தெய்வம் அல்ல என்றால் சரியல்ல. தாவா கோவிலுக்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்படி கோவிலுக்கு 1 முதல் 6 பிரதிவாதி வகையறாவால் நியமிக்கப்பட்ட காத்தன் வகையறா மற்றும் சின்னக்கருப்பன் வகையறா தான் பூசாரிகளாக நியமிக்கப்பட்டு பூஜை முறைகள் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.03.17 18:28:22 +0530